# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 05.08.2026**

**அசல் வழக்கு எண். 210/2018**

**வா.சா.2 (சுப்பையாபாண்டியன்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி என்றால் சரியல்ல. இவ்வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்த 1ம் வாதி எனக்கு எவ்வகையில் உறவினர் என்றால் அவர் எனது மாமனார் வகை உறவினர். வழக்கு தபசிலில் எத்தனை சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன என்ற விபரம் எனக்கு தெரயுமா என்றால் தெரியாது. வழக்கு தாவா சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் வாதிகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்ல செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாதிகள் ஏற்படுத்தியுள்ள பைப்லைன் வசதியை அவர்கள் அனுபவிப்பதிலிருந்து பிரதிவாதிகள் இடையூறு செய்வதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வல்லராமபுரத்தில் உள்ள பொதுமக்கள் வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட பைப் லைனை அகற்றக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு தாக்ல செய்துள்ளனர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த மனுவின் அடிப்படையில் 26.08.2012ம் தேதியன்று மாவட்ட ஆட்சியர் பைப்லைனை அகற்ற உத்தரவு பிறப்பித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தியுள்ள பைப்லைனை பிரதிவாதிகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக இவ்வழக்கை பொய்யான விபரங்களை கூறி வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**